RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22442

# ராமராஜனின் திரைஇசைப்பாடல்களில் வெளிப்படும் நாயகத்தன்மையும் சமூகப் பிரதிபலிப்பும்

சீ. பாலச்சந்தர் [அ, *], சி. கார்த்திகேயன் [அ]

[அ] இதழியல் மற்றும் புதிய ஊடகப்பள்ளி, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-600015, தமிழ்நாடு, இந்தியா

# Heroism and Social reflection in the Screen Plays of Ramarajan

S. Balachandar [a, *], C. Karthikeyan [a]

[a] School of Journalism and New Media Studies, Tamil Nadu Open University, Chennai – 600015 Tamil Nadu, India

* Corresponding Author: balafilmstudies@gmail.com

Received: 30-06-2022
Revised: 19-09-2022
Accepted: 05-10-2022
Published: 18-10-2022

**ABSTRACT**

Screen plays are always dominant in the history of Tamil cinema. Commercially many movies faced failures and some songs of those movies became very successful. Screen play songs are usually formed according to each story and screenplays. Some songs captures the mind of people and it remains in their mind throughout their life. Not just the songs or music gets popular, the actors who acted in the songs also sometimes became very popular and attains high status. and for this, apart from the acting, the song's grand scenery and the social environment depicted in the story play a major role. Thus, in the 1980s in the Tamil film industry, actor Ramarajan earned the title of 'People's Hero'/'Village Hero' and star status through village background stories and screen play songs. Most of Ramarajan's stories are set in rural settings, and the characters of those films are folk singers and actors. In such films, the cultural rituals of the villages, other rituals, dialects, worship methods, natural environment, etc. are clearly visualized in the lyrics of the songs. Therefore, Tamil people also enjoyed and celebrated it easily. It is a fact that the success of a movie depends on people's support. This article briefly examines the social reflection and heroism of Ramarajan’s stories.

**Keywords:** Tamil cinema, Ramarajan, Environment, Screenplay

## முன்னுரை

திரை நட்சத்திரங்களை உருவாக்குவதில் திரைப்படப் பாடல்களின் பங்களிப்பு இந்திய சினிமா கலாச்சாரத்தில் ஒரு மிக முக்கிய பகுதியாகும். தமிழ் திரைப்பட வரலாற்றில் கதை, திரைக்கதை, வசனம், நடிப்பு, என பன்முக பிரிவுகளின் வரிசையில் ஒரு நடிகருக்கு உரிய நட்சத்திர அந்தஸ்த்தை ஏற்படுத்துவதில் திரை இசை பாடல்கள் மிகப் பெரும் பங்காற்றுகின்றன. இது பார்வையாளர்களை மகிழ்விப்பது மட்டுமல்லாமல், ஒரு நடிகருக்கு என்ன விதமான பாடல், எங்கே? எப்படி? சித்தரிக்கப்படுகிறது என்பதில் அந்த நடிகருக்கான அடையாளத்தையும் அளிக்கிறது எனலாம். பாடல்கள் மற்றும் பாடல் காட்சிகளின் தேர்வு பெரும்பாலும் ஒரு திரைப்படத்தின் கதை பின்னணி மற்றும் காட்சிகளைப் பொறுத்தே அமையப்பெருகிறது. அவ்வாறாக காட்டப்படும் திரைக்கதை பின்னனியில் வெளிப்படும் சமூக பிரதிபலிப்பும் நாயக/நாயகியின் பிம்பத்தின் ஒரு ஊன்றுகோளாகத்தான் பார்க்கப்படுகிறது. 80-களின் பிற்பகுதியில் இருந்து 90-களின் முற்காலப்பகுதி வரை பல வகையான திரைப்படங்கள் வந்த போதிலும், கிராமிய பின்னனியில் உருவாக்கம் பெற்ற திரைப்படங்களும், திரை இசைப்பாடல்களும் சற்று அதிகமாகவே வெளிவந்த காலம் அது. பாரதிராஜா, ராஜ்கிரன், ராமராஜன்

போன்ற இயக்குநர்களும், நடிகர்களும் அதிகமான கிராமிய மண்வாசனை கொண்ட நாட்டுப்புற கதைக்களங்களையே தேர்வு செய்தார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். திரைப்படப் பாடல்களின் மூலமாக, 'மக்கள் நாயகன்' என்று முடிசூட்டப்பட்ட தமிழ் சினிமாவின் நடிகரான 'ராமராஜன்' மட்டும் ஒரு ஆண்டில் ஏறத்தாழ 45-க்கும் அதிகமான படங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, கிராமத்து நாயகனாக நடித்து அதில் தனக்கென ஓர் அங்கீகாரத்தையும் இடம்பிடித்துக் கொண்டார். அதற்கு அவரின் திரை இசைப் பாடல்களும் வலு சேர்த்தது என்பதற்கு இன்றும் பல இடங்களிலும், பல சமூக செயலிகளிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் அவரின் பாடல்களே சாட்சி எனலாம்.

## ஆய்வுமுறை

தமிழ் சினிமா இன்று எத்தனையோ புதுப்புது திரைக்கதை வடிவங்களையும், தொழில்நுட்ப யுக்திகளையும் பயன்படுத்தி பல்வேறு விதமான கோணங்களில் முன்னேறி சர்வதேச விருதுகளை அள்ளி குவித்துக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் மக்களின் வாழ்வில் இரண்டர கலந்த திரை இசைப் பாடல்களின் ஆதிக்கத்தை வைத்தே, 80-களில் தனது நட்சத்திர அந்தஸ்தை ஏற்படுத்திக் கொண்ட நடிகர் ராமராஜனின் திரைஇசைப்பாடல்களில் உள்ள நட்சத்திரக் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கிறது. ஆய்வு தரவாக முதலில் ராமராஜனின் அனைத்து பாடல்களும், பாடல்வரிகளும் கேட்டும், கண்டும் ஆராயப்பட்டுள்ளது. இரண்டாவதாக ராமராஜனின் படங்களும், கதையம்சமும், பாடல் காட்சியமைப்பும் குறிப்பு எடுக்கப்பட்டுள்ளது. இந்த தரவுகளை ஆய்விற்குட்படுத்தப்படும் நோக்கில் மூன்று நூல்களையும், அய்வுத்தேடலில் சமூக வலைதளங்களில் கண்டறியப்பட்ட நேர்காணல்களையும் விளக்க முறை ஆராய்ச்சிப் பகுப்பாய்வு இந்த ஆய்வுக்கட்டுரையில் பயன்படுத்தபட்டுள்ளது.

## ஆய்வுநூல்கள்:

இக்கட்டுரையின் ஆய்விற்காக டாக்டர்.சு.சக்திவேல் அவர்கள் எழுதிய 'நாட்டுப்புற இயல் ஆய்வு' நூலும், முனைவர். இரா.இரவிச்சந்திரன் அவர்கள் எழுதிய 'நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் நூலும், பேரா.கரு.அழ.குணசேகரன் அவர்கள் எழுதிய 'நாட்டுப்புற மண்ணும் மக்களும்' எனும் நூலும் வாசிக்கப்பட்டுள்ளது. சு.சக்திவேல் அவர்களின் 'நாட்டுப்புற இயல் ஆய்வு' நூலில் நாட்டுப்புற வாழ்வியல் முறைகள், வாழ்வியல் சடங்குகள், வழிப்பாட்டு முறைகள் என நாட்டுப்புற வாழ்க்கை சார்ந்த மக்களின் நம்பிக்கைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. முனைவர்.இரா.இரவிச்சந்திரன் அவர்களின் 'நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் நூலில் நாட்டுப்புற பாடல் வகைகளை பற்றியும், அவ்வகை பாடல்கள் எந்தந்த காலகட்டங்களில், எதற்காக பாடப்படும் என்றும், பாடு பொருளும், பாடுபொருளின் தன்மையும் பற்றிய விளக்கங்களை மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் புரிந்துகொள்ளும் வண்ணம் எழுதப்பட்டிருக்கும். மூன்றாவதாக பேர.கரு.அழ.குணசேகரன் அவர்களின் 'நாட்டுப்புற மண்ணும் மக்களும்' நூலில் மானுடவிய பார்வையில் நாட்டுப்புற மக்களின் வாழ்வில் அன்றாடம் நிகழும் நிகழ்வுகள், விசித்திர சடங்குகள், சிறப்பு நிகழ்வுகள் என நகர்ப்புற மற்றும் வெகுஜன வாழ்விற்கும் அப்பாற்பட்ட நிகழ்வுகளை விளக்கமாக ஆராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இம்மூன்று நூற்களும் இக்கட்டுரை பகுப்பாய்விற்கு பொருத்தமானதாக இருந்ததாலும், இதை சார்ந்த இன்னபிற நூற்களும், இம்மூன்று நூற்களின் சாரத்தையே கையாண்டுயுள்ளது என்பதாலும், இக்கட்டுரைக்கு இம்மூன்று நூற்களுமே போதுமானதாக துணை நின்றது.

## கதைக்களமும் சமூக கட்டமைப்பும்:

ராமராஜனின் திரைப்படக் கதைகள் அனைத்தும் பெரும்பாலும் கிராமப்புற பின்னணியில் அவரை ஒரு சுய கற்பித்த நாட்டுப்புறக் கதைமாந்தர் வேடங்களிலே காட்டப்பட்டன. அதிகம் படித்திராத ஒரு நாட்டுப்புற நடனக் கலைஞராக; முக்கியமாக ஒரு நாட்டுப்புற பாடகராக; உள்ளூர் இசைக்கலைஞராக; விவசாயியாக; வேலைக்காரனாக மற்றும் அரிதான படங்களில் நகர இளைஞனாகவும் தோன்றியுள்ளார். அவர் நடித்த 'நம்ம ஊரு நல்ல ஊரு', 'எங்க ஊரு பாட்டுக்காரன்', 'கரகாட்டக்காரன்', 'பாட்டுக்கு நான்

அடிமை', 'வில்லுப்பாட்டுகாரன்' 'ஊரு விட்டு ஊரு வந்து' போன்ற படங்களில் அவர் ஏற்று நடித்த பாத்திரங்கள் அனைத்தும் ஒரு சராசரி ஏழை, எளிய அடிதட்டு இளைஞனாக, கலைஞனாக அல்லது கிராமங்களின் அன்றாட வாழ்வியல் நிகழ்வுகளில் ஒன்றிணைந்த ஒரு கிராமத்தானாகவே நடித்துள்ளார். "நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை தாலாட்டுப் பாடலில் தொடங்கி விளையாட்டு, காதல் பாடல்களில் வளர்ந்து திருமணப்பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடலில் முடிவடைகின்றது." (Sakthivel, 1983). ராமராஜனின் படங்களில் பெரும்பாலும் தாலாட்டு பாடலுக்கு இணையாக மெல்லிசை பாடல்களும், எ.கா: 'கரகாட்டகாரன்' படத்தில் *"பாட்டாலே புத்தி சொன்னார்"* பாடல்; காதல் பாடல்கள் என்றால் அதே படத்தில் *"மாங்குயிலே பூங்குயிலே"* மற்றும் *"அந்தமான் உந்தன் சொந்தமான்"* பாடல்கள்; மற்றும் ஒப்பாரிப் பாடலுக்கு இணையாக *"குடகு மலை"* போன்ற சோக பாடல்களும் இடம்பெறுவதுண்டு. பெரும்பாலும் அவர் படத்தில் தோன்றும் வில்லன்கள் ஊர்தலைவர் அல்லது கிராமப் பணக்காரர்களாக இருப்பர். மேற்காணும் வில்லன்கள் செய்யும் அநீதி மற்றும் குற்றங்களுக்கு எதிராகப் போராடும் இளைஞர் வேடங்களிலும் கதாபாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டன. ராமராஜன் படங்களில் எம்.ஜி.ஆர் படங்களில் உள்ள பாடல் காட்சிகள் போலவே, மக்கள் நலனுக்காகப் பாடும் நாயகனாகவும், கிராமத்து / பாட்டாளி சமூகத்திற்காக குரல் கொடுக்கும் இளைஞராகவும், கிராமியப் பெண்ணுடன் (கதாநாயகி) மெல்லிசை பாடுவது போன்ற சாயல்களில் ராமராஜனின் பாடல்களும் இயற்றப்பட்டன. நடிகர் ராமராஜன் தனிப்பட்ட முறையில் எம்.ஜி.ஆரின் ரசிகராக இருந்ததால், எம்.ஜி.ஆர் படங்களைப் போன்று கதாபாத்திரம், உடைகள், காட்சிகள், வசனங்கள் ஆகியவற்றை வடிவமைக்கப்பட்டது. மேலும் புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்ற காட்சிகள் தனது திரைப்படங்களில் வருவதைத் தவிர்த்தார்.

("In his movies, Rama Rajan never acted in scenes that showed him smoking and consuming alcohol. The reason for this he attributed to being an ardent fan of actor Mr.M.G.Ramachandran, who had the same principles. Also, none of his movies were Adult certified and hence suitable for family viewing. The movies he acted had social themes.")

**மொ.பெ:** "ராமராஜன் தனது படங்களில் புகைபிடிப்பது, மது அருந்துவது போன்ற காட்சிகளில் நடித்ததில்லை. இதற்குக் காரணம், அதே கொள்கைகளைக் கொண்ட நடிகர் திரு.எம்.ஜி.ராமச்சந்திரனின் தீவிர ரசிகர் ஆக அவர் இருந்ததே காரணம். மேலும், அவரது படங்கள் எதுவும் 'வயது வந்தோர் மட்டும்' என்னும் சான்றிதழ் பெறவேவில்லை, எனவே குடும்பத்துடன் பார்க்க ஏற்றதான கதைக்களங்களையும், திரைக்கதையையும், பாடல் மற்றும் ஆடல் முறையையும் தேர்ந்தெடுத்தார். அவர் நடித்த படங்கள் உள்ளூர் சமூக சிக்கல்களைக் கருப்பொருளாக கொண்டிருந்தன."

அவரது பாடல் காட்சிகள் பெரிதும் கிராமப்புற பின்னணியில் சித்தரிக்கப்பட்டு, அவர் கிராமப்புற சமூகத்தின் உழைக்கும் வர்க்க மக்களை மதிப்பதாகவே காட்சிப்படுத்தப்பட்டன. ராமராஜன், பெண்களை இழிவுபடுத்தாமல், தாய்மை பற்றி புகழ்ந்து பேசுவது போன்ற காட்சிகள் பெண் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தது மற்றும் அவரது படங்களை மீண்டும் மீண்டும் பார்க்க குடும்ப பார்வையாளர்களை ஈர்த்தது எனலாம். ராமராஜன் ஒரு ஆங்கில பத்திரிக்கை நேர்காணலில்,

("People have grown to love me in my bright-coloured shirts. I never played a role with negative shades. My characters are very soft. I've never discussed politics in my films, and I want all my roles to be liked by women, especially mothers,")

**மொ.பெ:** "எனது பிரகாசமான நிற சட்டைகளில் மக்கள் என்னை நேசித்தார்கள். நான் கெட்டவன் வேடத்தில் நடித்ததில்லை. என்னுடைய கதாபாத்திரங்கள் மிகவும் மென்மையானவை. நான் எனது படங்களில் அரசியலைப் பற்றிப் பேசியதில்லை, என்னுடைய எல்லாப் பாத்திரங்களும் பெண்களால் குறிப்பாக தாய்மார்களால் விரும்பப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்," எனக் கூறியுள்ளார். இது ராமராஜனுக்கு நாயக அந்தஸ்தைக் கொடுத்தது எனலாம்.

ராமராஜனின் பெரும்பாலான படங்களில் 'அம்மா'வை பற்றிய பாடல்களும் இடம்பெறுவதுண்டு, அதில் 'என்ன பெத்த ராசா' படத்தில் இருந்து *"பெத்த மனசு"* எனும் பாடல்; 'என்னை விட்டு போகாதே' எனும் படத்தில் இடம்பெற்றிடும் *"பொன்ன போல ஆத்தா"* போன்ற பாடல்கள் தாய்மார்களின் முக்கியத்துவத்தையும், அவர்களைப் போற்றும் பாடல்களாக இயற்றப்பட்டன. ராமராஜனின் படங்களின்

மூலம் மீண்டும் திரையில் எம்.ஜி.ஆர் படங்களைப் பார்த்தது போன்ற ஓர் எண்ணத்தை ஏற்படுத்தியதாக தோன்றினாலும், எம்.ஜி.ஆர் படங்களில் பேசப்பட்ட திராவிட அரசியலோ, பன்முக கதாப்பாத்திரமோ, செழிப்பான (பணக்கார) தோற்றமோ ராமராஜனின் படங்களில் இடம்பெற்றதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## நாட்டுப்புறப்பாட்டும் நாயகத்தன்மையும்:

80 முதல் 90 களில் ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் ஆகியோருக்கு இணையானதாகக் கொண்டாடப்பட்ட நடிகர் ராமராஜனை ஒரு நட்சத்திர இடத்தை அடைய வைத்தது திரைப்பட இசை மற்றும் பாடல்கள் தான்.

("At his peak, the actor rivalled the likes of Rajinikanth and Kamal Haasan in terms of popularity, salary (he charged up to ₹2 lakh for a day's shoot) and opening. Sources say he was the only actor in Tamil who acted continuously in 44 films in a row as a solo hero of Tamil Cinema.")

**மொ.பெ:** "அவர் புகழின் உச்சத்தில் இருந்த போது, நடிகர் ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன் போன்றவர்களுக்குப் போட்டியாக இருந்தார், சம்பளம் மட்டுமே (ஒரு நாள் படப்பிடிப்பிற்கு அவர் ₹2 லட்சம் வரை வசூலித்தார்). தமிழ் சினிமாவின் தனி நாயகனாக தொடர்ச்சியாக 44 படங்களில் தொடர்ந்து நடித்த ஒரே நடிகர் இவர் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன." என்று ஒரு சினிமா பத்திரிக்கை தெரிவிகின்றது.

'மக்கள் நாயகன்' என்ற பட்டத்தை ராமராஜனுக்கு வழங்கப்பட்டதற்கு அவர் தேர்ந்தெடுத்த கதை மற்றும் பாடல்களின் தாக்கம் என்றே கூறலாம். தமிழ் சினிமாவின் 80-களின் முதல் 90-கள் வரை திரைப்படப் பாடல்கள் மற்றும் பின்னணி இசை பெரும்பாலும் இசையமைப்பாளர் இளையராஜாவின் இசையமைப்பிலேயே உருப்பெற்றன. கங்கை அமரன் (இளையராஜாவின் தம்பி) மற்றும் இளையராஜா ஆகிய இருவர் மட்டுமே பெரும்பாலும் ராமராஜன் படங்களுக்கு இசையமைத்தார்கள். ராமராஜனின் திரைப்படப் பாடல்கள், நாட்டுப்புறத் தொடுகையுடன் கலந்த கர்நாடக ராகத்தின் அடிப்படையில் நாட்டுப்புற மெல்லிசைகளின் தனித்துவமான இசையமைப்பை கொண்டிருந்தன.

ராமராஜனின் பாடல்களில் தவில், நாதஸ்வரம், பம்பை, உடுக்கை, உருமி, கொம்பு என பாரம்பரிய நாட்டுப்புற இசைக்கருவிகளின் பயன்பாடு அதிக அளவில் உபயோகிக்கப்பட்டு, சில மேற்கத்திய இசைக்கருவிகளின் தொழில்நுட்ப கலவையுடன் சேர்ந்து இசைத்ததில் நாட்டுப்புற பாடல்களைக் திரை இசை வடிவில் கேட்பதற்கு முற்றிலும் ஒரு மாறுபட்ட அனுபவமாக, பார்வையாளர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளித்தது எனலாம். இது முற்றிலும் நாட்டுப்புற பாடலை கர்நாடக இசையுடன் கலந்த ஒரு கலவையாக கேட்க முடிந்தது. "நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் காடு கழனிகளிலும் தோட்ட வயல்களிலும் தொழில் செய்யும் இடங்களிலும் பிறக்கின்றன." என்கிறார் சு.சக்திவேல் (Sakthivel, 1983). மேலும், "தொழிலின்றி உலகம் கிடையாது. கிராமங்களில் பாடல்களின்றித் தொழில்கள் கிடையாது. நாட்டுப்புற பாடல்களில் தொழிற் பாடல்கள் அதிகம் உண்டு. பல்வேறு தொழில் தொடர்பாகப் பாடப்படும் பாடல்கள் அனைத்தும் தொழிற்பாடல்கள் அல்லது வேளாண்மைப் பாடல்கள் என்ற வகையில் அடக்கலாம்." என்கிறார் முனைவர்.இரா.இரவிச்சந்திரன் அவர்கள் (Ravichandran, 2008). அவ்வாறாக ராமராஜனின் படங்களில், பெரும்பாலான பாடல்கள், வயல்களில், காடுகளில், மாட்டுத் தொழுவத்தில், அவரின் கதாப்பாத்திர தொழில் சார்ந்த பாடல்களாகவே இடம்பெற்றன. அவற்றுள் சில பாடல்கள் தமிழ் சினிமாவிற்கு மட்டுமல்லாது தமிழரின் வாழ்க்கையில் குறியீட்டு சின்னங்களாகவே மாறிவிட்டன என்றே கூறலாம். குறிப்பாக இன்று வரை 'பசுவிடம் பால் கறப்பதை' பல படங்களில் காட்சிப்படுத்தும் பொழுதும், சில தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ராமராஜனை நினைவுபடுத்தவும் *'செண்பகமே செண்பகமே'*, எனும் பாடலையே ஒலிக்கச் செய்கிறார்கள். கரகாட்டம் போன்ற நாட்டுப்புற நடன வடிவங்களும், வில்லுப்பாட்டு, தெம்மாங்கு போன்ற நாட்டுப்புற பாடல்களும் குறிப்பாக ராமராஜனின் படங்களுக்கு நன்றாக பொருத்தம் சேர்த்தது எனலாம். "சொர்கமே என்றாலும்", "மதுரை மரிக்கொழுந்து", "நேத்து

ஒருத்தர ஒருத்தரு", "கலைவாணியோ ராணியோ", "ராசாத்தி மனசுல", "பெத்த மனசு" போன்ற பாடல்கள் மற்றும் தமிழ் சினிமாவின் கிராமத்து காவிய திரைப்படமான 'கரகாட்டக்காரன்' பாடல்கள் அனைத்தும் இளையராஜாவின் இசையிலும், ராமராஜனின் நடிப்பிலும் மிகவும் புகழ்பெற்று தமிழகமெங்கும் அப்பாடல்கள் ஒலிக்கத்தொடங்கின.

'கரகாட்டக்காரன்' படத்தின் இயக்குநர் கங்கை அமரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

("***Karakattakaran*** was more rooted in the folk music we grew up with. Pallavaraayanapatti near our home used to host such folk shows that would run well past midnight. They wouldn't have great dialogues but had such lovely sounds. Anna could bring the more festive sounds of *Thavil* and *pakkamelam* in songs like *Podhuvaaga Emmanasu Thangam*, but we wanted to include instruments like *Urumi, Shehnai, Nadasawaram*, and *Muga Veenai*. So we decided to do a film about village dancers and singers whose stories hadn't been told.")

**மொ.பெ:** "கரகாட்டக்காரன், நாட்டுப்புறங்களில் நாங்கள் அதிகம் வேரூன்றி கேட்டு வளர்ந்த இசையாகும். இதுபோன்ற நாட்டுப்புற நிகழ்ச்சிகள் எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள பல்லவராயன்பட்டியில் நள்ளிரவைத் தாண்டி நடத்தப்படும். அவர்கள் பெரிய உரையாடல்களைக் கொண்டிருக்க மாட்டார்கள், ஆனால் அழகான ஒலிகளைக் இசைக்கும் கருவிகளைக் கொண்டிருந்தனர். "*பொதுவாக எம்மனசு தங்கம்*" போன்ற பாடல்களில் தவில் மற்றும் பக்கமேளத்தின் பண்டிகை ஒலிகளை அண்ணா (இளையராஜா) கொண்டு வர முடியும், ஆனால் உருமி, செனாய், நாதஸ்வரம், முக வீணை போன்ற வாத்தியங்களை சேர்க்க விரும்பினார். எனவே கதைகள் சொல்லப்படாத கிராமிய நடனக் கலைஞர்கள் மற்றும் பாடகர்களைப் பற்றி படம் எடுக்க முடிவு செய்தோம்." என்கிறார். கிராமப்புற பார்வையாளர்களுக்கு பாலமாக இருந்த நாட்டுப்புற ட்யூன்களை, கரகாட்டகாரனின் இசையிலும் பாடல்களிலும், இதுவரை நாட்டுப்புற பாடல்களை கேட்டிராத நகர்ப்புற பார்வையாளர்களுக்கு ஒரு புதிய இசை விருந்தாக அமையப்பெற்றது எனலாம் (Arunkumar Sekhar, 2019).

## பாடல்களுக்காகவே இயற்றிய காட்சிகளும் படங்களும்:

ராமராஜன் பாடல்களில் எழுதப்பட்ட வரிகள் அனைத்தும் எளிமையான கிராமிய மொழி நடையில் இருந்தன. பொதுவாக மதுரை பேச்சுவழக்கில் இருக்கும் கதை பின்னணியே பயன்படுத்தப்பட்டது. தென் தமிழ்நாட்டுப் பகுதியின் பேச்சுவழக்குகள் பல வட்டார வழக்குகளைக் கொண்டிருந்தது. மாவட்ட வாரியான பேச்சுவழக்குகள் வரையரைக்குட்பட்டு, ஒரே மாவட்டத்திலும் கூட சில இடங்களில் அந்தந்த குறுநிலப்பரப்பிற்கு ஏற்றாற்போல் வட்டார சொற்களும், மொழிவழக்கும் வேறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, மதுரை மாவட்டத்தின் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி மற்றும் மையப் பகுதியின் மொழி வழக்கு ஒரே மாதிரியாக இருக்காது என்றும், மதுரையை பூர்வீகமாகக் கொண்ட கிராமப்புறத்திற்கும் நகர்ப்புற மொழி வழக்கிற்கும் கூட வெவ்வேறு வழக்குகளை பேசுவார்கள் என்பதை நகைச்சுவை நடிகர் வடிவேலு பல நேர்கானல்களில் கூறியிருக்கிறார். பாடல் வரிகள் பெரும்பாலும் வட்டார மொழி கடவுள்கள் மற்றும் கோவில்கள் பற்றி கவனம் செலுத்துவதாகவே எழுதப்பட்டன. "'கோயிலிலா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியே தமிழகத்தில் வழங்குகிறது. நல்லது நடந்தால் தெய்வ அருள் என்றும் தீயவை நடந்தால் தெய்வத்தின் கோபம் என்றும் நம்புகின்றனர்.". கரகாட்டகாரன் படத்தில் வரும் "மாரியம்மா… மாரியம்மா…" பாடலின் சாரமும் அவ்வகை நம்பிக்கையின் அடிப்படையிலே காட்சிப்படுத்தபட்டிருக்கும். "நாட்டுப்புறமக்கள் நாட்டுப்புறத் தெய்வங்களை நம்பிக்கையுடனும் அச்சம் கலந்த உணர்வுடனும் வழிபடுகின்றனர்." கரகாட்டக்காரர்களான கதாநாயகியும் கதாநாயகனும் கோவிலிற்குள் வழிபட உள்ளே செல்லும் போது, அதை பார்த்த வில்லன் கோவில் கதவை பூட்டி அவர்கள் இருவரும் தவறாக நடக்க முயன்றதாகவும், கோவிலை அசிங்கப்படுத்தியதாகவும், அதனால் ஆத்தாவின் (மாரியம்மன்) கோபத்திற்கு ஊரே பலியாக நேரிடும் என்றும், குற்றத்தை மறுத்த அவர்களை மாரியம்மன் முன்பு தீயில் கரக நடனம் ஆடி வந்து நிரபராதி என தங்களை நிரூபிக்குமாரும் சூழ்ச்சி திட்டம் தீட்டுவான் வில்லன். "கரக ஆட்டம் மாரியம்மனுடன் தொடர்புடையதாகும்." ஆகையாலே, அப்படத்தின் க்ளைமாக்ஸ் (கடைசி கட்டக்காட்சி) மிகவும் உணர்ச்சிபூர்வமான காட்சியாக எடுக்கப்பட்டு இருக்கும். இவ்வகை காட்சிகள் கிராமம்

மட்டுமல்லாது, கடவுள் நம்பிக்கை கொண்ட அனைவரின் மனங்களிலும் இடம் பிடித்த படமாக மாறியது. கரகாட்டகாரன் படத்தை பற்றி ராமராஜன் ஒரு பேட்டியில்,

("Not even one ticket was unsold in the 385 days that it ran [in Nadanaa]. When we shifted the print to other theatres, it ran for a few more weeks. I think in Madurai alone the film ran for 450+ days, with theatres earning an operating profit on every show.")

**மொ.பெ:** "நடனாவில் ஓடிய 385 நாட்களில் ஒரு டிக்கெட் கூட விற்கப்படாமலில்லை. பிரிண்ட் வேறு தியேட்டர்களுக்கு மாற்றியபோதும், இன்னும் சில வாரங்கள் ஓடியது. மதுரையில் மட்டும் படம் 450+ நாட்கள் ஓடியது, திரையரங்குகள் ஒவ்வொரு காட்சியிலும் இயக்க லாபம் ஈட்டின." என்கிறார். அதே படத்தை பற்றி ஒரு சினிமா பத்திரிக்கையில்,

("When ***Karakattakaran*** released on June 16, 1989, director Gangai Amaren didn't expect it would be such a big success, " and added to that continued to assert that "It ran for over 100 days in 25 centers, one year in seven-eight centres and clocked 400 days in four theatres," says the lyricist-turned-director.")

**மொ.பெ:** "கரகாட்டக்காரன் ஜூன் 16, 1989-ல் வெளியானபோது, இவ்வளவு பெரிய வெற்றியைப் பெறும் என்று இயக்குனர் கங்கை அமரன் எதிர்பார்க்கவில்லை," அது மேலும் "இது 25 மையங்களில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது, ஏழு-எட்டு மையங்களில் ஒரு வருடமும், நான்கு திரையரங்குகளில் 400 நாட்கள் ஓடியது" என்கிறார் பாடலாசிரியராக மாறிய இயக்குனர்" என்று ஒரு பிரபலமான சினிமா இணையதளம் எழுதியது (Arunkumar Sekhar, 2019).

பல பாடல்களில் 'அம்மா'வின் அன்பை போற்றியும், சொந்த மண் சார்ந்த பாடலான *"சொர்கமே என்றாலும்"* பாடலில் நாட்டுப்புற கலாச்சாரங்கள் பற்றியும், *"செண்பகமே செண்பகமே"* எனும் பாடலில் தான் பராமரிக்கும் பசுமாட்டினை, ஒரு காதலியை வர்ணித்து பாடுவது போலே பெருமைபடுத்தியும், அதே படத்தில் காளை மாட்டின் பெருமை பற்றி *"பேச்சி பேச்சி"* போன்ற பாடல்களில் நடித்து தன்னை ஒரு 'கிராமத்து நாயகன்' என்ற அடையாளத்தை பெற்றுக்கொண்டார். அவ்வகை படங்களும் பாடல்களும் அவரது திரைப்படங்களை C & B முதல் A மையங்களுக்கு விளம்பரப்படுத்தியது. ராமராஜன் படங்களில் நாட்டுப்புற சடங்குகளை ஆங்காங்கே காட்சிப்படுத்துவது உண்டு. நாட்டுப்புறங்களில் கோடாங்கி என்று சொல்லக்கூடிய பேய் விரட்டும் சடங்குகளும் நடப்பது வழக்கம். "நாட்டுப்புறங்களில் கோடாங்கி என்று சொல்லக்கூடிய பூசாரி ஒருவர் பேய் பிடித்து இருப்பதாக கூறப்படும் பெண்ணை தன் முன்னே அமர வைத்து பேசி - பெரும்பாலும் இரவு வேலைகளில் - உடுக்கை இசைத்துப்பாடி, ஆடி, அதட்டி, அடித்து, சடங்குமுறைகள் செய்து பேய் விரட்டுவார். அல்லது விரட்டி அடிப்பார்." (Gunasekaran, 2008) 'ஊரு விட்டு ஊரு வந்து' என்னும் திரைப்படத்தில் கதாநாயகிக்கு பேய் பிடித்திருப்பதாகவும் அந்த பேயை விரட்ட கிராமத்தில் இருக்கும் பூசாரி அதாவது 'கோடாங்கி' ஒருவர் (நகைச்சுவை நடிகர்கள்) அந்த கதாநாயகியிடம் பிடித்திருக்கும் பேயை விரட்டச் செல்ல, அது சிங்கப்பூரிலிருந்து கதாநாயகனின் அப்பாவை காப்பாற்றுவதற்காக புறப்பட்டு வந்திருக்கும் பேய் என தெரியவரும். பிறகு கதாநாயகனும் கதாநாயகியும் அந்த பூசாரி அனைவரும் சேர்ந்து சிங்கப்பூர் சென்று கதாநாயகனின் அப்பா ஒரு நிரபராதி என நிரூபிக்கப்பட்டு அவரை கூட்டி வருவதாக திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கும். இது போன்றே ராமராஜனின் படங்களில், நாட்டுப்புற வாழ்வியல் முறைகளை அதிகம் கானலாம். மேலும் அதிக படக்காட்சிகளிலும், பாடல்களுக்கு முன்பாகவும் கதாநாயகியோ அல்லது வில்லனோ அல்லது யாரெனும் ஒரு முக்கிய கதாப்பாத்திரமோ ராமராஜனை போட்டிக்கு அழைப்பதை பொதுவாகவே அவரது திரைப்படங்களில் காணலாம். 'எங்க ஊரு பாட்டுக்காரன்' படத்தில் காளையை அடக்கும் போட்டியில் வில்லனின் சவாலுக்கு எதிராக, *"பேச்சி பேச்சி"* எனும் பாடலை பாடியே அந்த வில்லனின் மாட்டை அடக்கி வெற்றி காண்பது போன்று காட்சிமயமாக்கப்பட்டிருக்கும். தமிழரின் வீரமரபென கருதப்படும் வீரவிளையாட்டுகளில் ஒன்றான காளை அடக்குதல் போட்டியை அதுவரை தமிழ் சினிமாவில் எந்த ஒரு நாயகனுக்கும் கொடுக்காத வித்தியாசமான திரைக்கதை அமைப்பை, அதாவது பாடல் மூலமாக அடக்கும் முறையை ராமராஜன் அவர்களுக்கு மட்டுமே கொடுத்திருக்கின்றனர். அதே போன்று 'கரகாட்டகாரன்' படத்திலும் கதாநாயகியின் மாமன், ராமராஜனை பார்த்து நாயகியுடன் ஆட்டத்தில் போட்டியிட தயாரா எனும் கேள்விக்கு, ராமராஜன் 'போட்டினா எனக்கு

அல்வா சாப்பிடறது மாதிரி' என்று அந்த சவாலை ஏற்றுக் கொண்டு, பிறகு *'முந்தி முந்தி விநாயகனே'* எனும் பாடலில் அந்த போட்டியில் கலந்துக்கொள்வது போன்று திரைக்கதை அமைந்திருக்கும். 'வில்லுப்பாட்டுகாரன்' எனும் படத்தில் உதடுகள் ஒட்டாமல் ஒரு பாடலைப் பாடச் சொல்லி ஒரு வித்தியாசமான சவாலை தொடுப்பார் கதாநாயகி. உடனே ராமராஜனும் *'தந்தேன் தந்தேன்'* எனும் பாடல் முழுவதிலும் உதடுகள் ஒட்டாமல் பாடும்படி நடித்திருப்பார். இப்பாடல் உண்மையில் பாடலாசிரியர் வாலிக்கு சவாலாக இருந்தது எனலாம். ராமராஜனின் பாடல்வரிகள் கிராமப்புற கலாச்சாரம் மற்றும் வாழ்விடத்தின் சாரத்தை முற்றிலுமாக அசைபோட்டு வெளிப்படுத்தின எனலாம். இது ராமராஜன் செய்த அளவுக்கு வேறு எந்த நடிகரும் செய்யவில்லை. இவை அனைத்துமே ராமராஜனை நாயக அந்தஸ்த்துக்கு கொண்டு சென்றுள்ளதைக் கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

## முடிவுரை

திரைப்படப் பாடல்கள் மற்றும் காட்சிகள் மூலம் நாயக அந்தஸ்தை அடைய முடியும் என்பதற்கு ராமராஜனின் படங்களே சான்றாகும். ராமராஜனின் படங்கள் தற்போது திரைக்கு வராவிட்டாலும் முன்பு நடித்த திரைப்படங்களின் பாடல்கள் கிராமப்புற மற்றும் தென் மாவட்டங்களில் உள்ள டீக்கடைகள், உள்ளூர் பேருந்துகள், கடைகள், உணவகங்கள் போன்ற பொது இடங்களில் இப்போதும் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

## References

Arunkumar Sekhar, (2019) 30 years of Karakattakaran - Gangai Amaren: The Vazhapazham comedy track was based on a similar sequence in an Adoor Bhasi film. Available on: https://www.cinemaexpress.com/stories/interviews/2019/jun/16/30-years-of-karagattakaran--gangai-amaren-ilaiyaraaja-ramarajan-kanaka-vazhapazham-comedy-12320.html

Gunasekaran, A. (2008) Naatupura Mannum Makkalum, New century book house, Chennai, India

Pradeep Kumar, (2019) 30 years of 'Karagattakaran': actor Ramarajan goes on rewind mode, Available on: https://www.thehindu.com/entertainment/movies/karakattakaran-2-is-not-happening-says-actor-ramarajan/article27948457.ece

Ravichandran, R. (2008) Folklore Songs, Nalnilam Pathippagam, Chennai, India

Sakthivel, S. (1983) Nattupura Iyal Aivu, Manivaskar Publishing House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License